*PN/SSCL/2022- 01*
*21.09.2022*

# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# வரி செலுத்துநர்களுக்கான அறிவித்தல்

## *2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் அமுலாக்கம்*

### *1. விதிப்பனவு*

*2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் (ச.பா.உ.அ. சட்டத்தின்) பிரகாரம், 2022, ஒக்டோபர் 01 ஆம் திகதி செயல்வலுப்பெறும் வகையில் சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு 2.5% வீதத்தில் விதிக்கப்படும்.*

### *2. பொறுப்பின் நோக்கம் (பிரிவு 2)*

*அ) ஏதேனும் பொருட்களை இறக்குமதி செய்யும்;*

*ஆ) ஏதேனும் பொருட்களை உற்பத்தி செய்யும் வியாபாரத்தை மேற்கொள்ளும்;*

*இ) எந்தவொரு வகையிலான சேவையை வழங்கும் வியாபாரத்தை மேற்கொள்ளும்; அல்லது*

*ஈ) பந்தி (ஆ) இன் ஏற்பாடுகள் ஏற்புடைய உற்பத்தியாளராக காணப்பட்டு, அந்த பொருட்களின் உற்பத்தியாளரின் விற்பனை தவிர்ந்த அத்தகைய பொருட்களின் இறக்குமதி மற்றும் விற்பனை அடங்கலாக ஏதேனும் பொருட்களின் மொத்த அல்லது சில்லறை விற்பனையின் வியாபாரத்தை மேற்கொள்ளும்.*

*ஒவ்வொரு நபரினாலும் சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீடு செலுத்தப்படுதல் வேண்டும்.*

### *3. பதிவு (பிரிவு 4)*

*ஏதேனும் பொருட்களை இறக்குமதி செய்யும் வரியிடற்பாலதான நபர்கள் தவிர்த்து, ஒவ்வொரு வரியிடற்பாலதான நபர்களும் (2 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள நபர்கள்), பதிவு செய்வதற்கு தேவைப்படுத்தப்படுகின்றனர்;*

| | |
|---|---|
| ***i. ஏலவே ரூபா 120 மி இனை விஞ்சிய புரள்வை உடைய நபர்***<br>*விலக்களிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளிலிருந்தான புரள்வினை தவிர்த்து, ச.பா.உ.அ சட்டம் செயற்பாட்டிற்கு வரும் திகதிக்கு உடன் முந்திய பன்னிரண்டு மாதங்களினுள் மொத்த புரள்வு ரூபா 120,000,000 இனை விஞ்சுமாயின்.* | *- ச.பா.உ.அ சட்டம் செயற்பாட்டிற்கு வரும் திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்* |

***உதாரணம்**: 01.10.2021 முதல் 30.09.2022 வரையிலான காலப்பகுதிக்கு புரள்வானது, (மொத்த புரள்வு – விலக்களிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள்) ரூபா 120 மில்லியனை விட அதிகமாயின், அத்தகைய நபர்கள் 2022, ஒக்டோபர் 15 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவு செய்ய தேவைப்படுத்தப்படுகின்றனர்.*

***ii.* வேறு எவரேனும் நபர்கள்**

| | | |
|---|---|---|
| வேறு எவரேனும் நபர்களுக்கு காலாண்டு ஒன்றுக்கு ரூபா *30,000,000* | - | மேலே விடயம் *(i)* இற்கு உட்படாத நபராயின், புரள்வானது காலாண்டு ஒன்றுக்கு ரூபா *30* மில்லியனை விஞ்சும் திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் |

- *வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) உள்ள நபர்கள், முறையாக பூரணப்படுத்தப்பட்ட வரி வகைப் பதிவுப் படிவத்தினை **[TPR_005(SSCL)]** (உள்நாட்டு இறைவரி வலைதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்) பின்வரும் அலகுகளில் சமர்ப்பித்து பதிவினைப் மேற்கொள்ளலாம்*
  - *தலைமைக் காரியாலயம் மற்றும் சாரணர் கட்டிடத்தில் கையாளப்படும் வரிக் கோவைகளுக்கு, தலைமை காரியாலயத்திலுள்ள வரி வகைப் பதிவு அலகு*
  - *நகர/பிராந்திய அலுவலகம் எவற்றிலேனும் கையாளப்படும் வரிக் கோவைகளுக்கு ஏதேனும் நகர/பிராந்திய அலுவலகம்;.*

- *ஏனைய நபர்கள் (வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் அற்றோர்) வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் (உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைதளத்தின் இ – சேவை ஊடாக அல்லது (TPR_001 or TPR_002) விண்ணப்பப்படிவத்தை தலைமை காரியாலயத்தின் முதன்மை பதிவு அலகு அல்லது ஏதேனும் நகர/பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம்). அதன் பின்னர் ச.பா.ப.அ பதிவிற்கு பூரணப்படுத்திய **(TPR_005) வரி வகை பதிவுப் படிவத்தை** வரி வகைப் பதிவு அலகு அல்லது நகர/பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.*

***4. ச.பா.உ.அ. இன் கொடுப்பனவு (பிரிவு 17)***

*ச.பா.உ.அ. ஆனது சுய – மதிப்பீட்டின் பேரில் மூன்று தவணைகளில் செலுத்தப்படத்தக்கது. கொடுப்பனவை செலுத்துவதற்கான திகதிகள் பின்வருமாறு.*

***i. கொடுப்பனவை செலுத்துவதற்கான திகதி***

| ***தவணை*** | ***கொடுப்பனவுத் திகதி*** |
|---|---|
| *1 ஆம் தவணை* | *முதலாம் மாதத்திற்கான வரிச் செலுத்துகையானது ஏற்புடைய காலாண்டின் இரண்டாவது மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.* |
| *2 ஆம் தவணை* | *இரண்டாம் மாதத்திற்கான வரிச் செலுத்துகையானது ஏற்புடைய காலாண்டின் மூன்றாவது மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.* |
| *3 ஆம் தவணை* | *மூன்றாம் மாதத்திற்கான வரிச்செலுத்துகையானது, ஏற்புடைய காலாண்டின் இறுதியின் உடன் அடுத்து வரும் மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.* |

*ii.* **கொடுப்பனவு நறுக்கில் உள்ளடக்கப்பட வேண்டிய விபரங்கள்**

*கொடுப்பனவு நறுக்கில் பின்வரும் விபரங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.*

- *கொடுப்பனவு காலப்பகுதிக் குறியீட்டு வடிவம்: (YY/Q/0/M)*

  *உதாரணம் ஒக்டோபர் 2022 - கொடுப்பனவுக் குறியீடு: 22401*

- *வரி வகை குறியீடு: 32*

*கொடுப்பனவு நறுக்கில் வரி செலுத்துநர் அடையாள இலக்கம், மேலே தரப்பட்டுள்ள கொடுப்பனவுக் குறியீடு மற்றும் வழமையான ஏனைய விபரங்களைக் குறிப்பிட்டு இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் கொடுப்பனவினை மேற்கொள்ளலாம்.* .

*ச.பா.உ.அ இற்கு பதிவு செய்த பின்னர் ச.பா.உ.அ. ஆனது, பதிவிற்கான புரள்வு எல்லையை பொருட்படுத்தாது செலுத்தப்படுதல் வேண்டும்.*

***5. பொறுப்புடைய புரள்வு (இரண்டாம் அட்டவணை)***

| | **விவரணம்** | | **பொறுப்புடைய புரள்வு** |
|---|---|---|---|
| *i* | *ஏதேனும் பொருளின் இறக்குமதி (சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் சேகரிக்கப்படத்தக்கது)* | | *இறக்குமதிப் பெறுமதியின் 100%* |
| *ii* | *ஏதேனும் பொருளின் உற்பத்தி* | | *புரள்வின் 85%* |
| *ii* | *சேவை வழங்குகை* | *அ) நிதி சேவைகளின் வழங்குகை* | *நிதிச் சேவைகளுக்கு* சாற்றப்படத்தக்க பெறுமதி சேர்ப்பின்100%* |
| | | *ஆ) காணி மற்றும் சீராக்கல்* | *புரள்வின்** 100%* |
| | | *இ) (அ) மற்றும் (ஆ) தவிர்ந்த சேவைகள்* | *புரள்வின் 100%* |
| *iv* | *மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை****** | *அ)இலங்கையில் எவையேனும் பண்டங்களின் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர் தொடர்பில் பதிவு செய்யப்பட்டவொரு விநியோகிப்பாளரினால் ஏதேனும் **** பொருள் விற்பனை செய்யப்படுதல்* | *புரள்வின் 25%* |
| | | *ஆ) இறக்குமதி மற்றும் விற்பனை அடங்கலாக மேலே (அ) என்ற விடயம் தவிர்ந்த மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை* | *புரள்வின் 50%* |

**நிதிச் சேவைகளுக்கு சாற்றப்படத்தக்க பெறுமதி சேர்ப்பு, 2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 25இ ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வர்த்தமான அறிவித்தலில் குறிபிடப்பட்டுள்ள சாற்றப்படத்தக்க முறைமையினைப் பிரயோகிப்பதன் மூலம் கணிப்பீடு செய்யப்பட்டது*

***புரள்வு = விற்பனை பெறுமதி – விற்பனை திகதி அன்றுள்ளவாறான காணியின் சந்தைப் பெறுமதி*

****கீழ்வரும் பரிவர்த்தனைகளும், மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனையின் கீழே தரப்பட்டுள்ளது*

- *வாங்கி விற்றல்*
- *இறக்குமதி செய்து விற்றல்*

- *தயாரித்து விற்றல் (உற்பத்தி செய்து விற்றலை உள்ளடக்காது)*

***** இலங்கையில் ஏதேனும் பண்டத்திற்கு எவரேனும் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர் என்பது, காலத்திற்கு காலம் அத்தகைய உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரினால் அத்தகைய பண்டத்திற்கு நிருணயிக்கும் அத்தகைய விலையில், மொத்த விற்பனைச் சந்தையில் விற்பதற்காக அத்தகைய உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரினால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் அல்லது பங்குடமை என பொருள்படும்.*

***6. ச.பா.உ.அ. விபரத்திரட்டினை சமர்ப்பித்தல் (பிரிவு 8)***

*விபரத்திரட்டினை சமர்ப்பிக்க வேண்டிய திகதி: ஏற்புடைய காலாண்டின் இறுதி மாதத்தை தொடர்ந்து வரும் மாதத்தின் 20 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர்.*

| ***காலாண்டு*** | ***சமர்ப்பிக்க வேண்டிய திகதி*** |
|---|---|
| *1 ஆம் காலாண்டு (சனவரி முதலாம் திகதி முதல் மார்ச் முப்பத்தியோராம் திகதி வரை)* | *ஏப்பிரல் இருபதாம் திகதி* |
| *2 ஆம் காலாண்டு (ஏப்பிரல் முதலாம் திகதி முதல் ஜூன் முப்பதாம் திகதி வரை)* | *ஜூலை இருபதாம் திகதி* |
| *3 ஆம் காலாண்டு (ஜூலை முதலாம் திகதி முதல் செப்தம்பர் முப்பதாம் திகதி வரை)* | *ஒக்டோபர் இருபதாம் திகதி* |
| *4 ஆம் காலாண்டு (ஒக்டோபர் முதலாம் திகதி முதல் திசம்பர் முப்பத்தியோராம் திகதி வரை)* | *சனவரி இருபதாம் திகதி* |

*இவற்றினை*

*i. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏற்புடைய நகர/பிராந்திய அலுவலகம் அல்லது*

*ii. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தின் 1 ஆம் மாடியிலுள்ள மத்திய ஆவணப்படுத்துகை முகாமைத்துவ அலகு (CDMU)*

*ஆகியவற்றில் சமர்ப்பிக்கவும்.*

***7. புரள்வு (பிரிவு 3)***

*ச.பா.உ.அ. சட்டம் ஏற்புடைய ஒவ்வொரு வகை தனிநபருக்கும் வரையறுக்கப்பட்டுள்ள புரள்வு பின்வருமாறு:-*

*அ) ஏதேனும் பொருளிலிருந்தான இறக்குமதியிலிருந்து எழுகின்றது என்பது, ச.பா.உ.அ. சட்டத்தின் முதாலம் அட்டவணையின் பகுதி IA இல் குறிப்பிடப்பட்டுள்ள எவையேனும் விலக்களிக்கப்பட்ட பொருளின் பெறுமதியை உள்ளடக்காத, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் பெறுமதி சேர் வரிக்கு அந்த*

பொருளுக்கு பெறப்பட்ட பெறுமதி எனப் பொருள்படும்; (CIF Value + சுங்கத் தீர்வை + Cess + PAL + Excise or any other duty payable to Customs + 10% of CIF Value)

ஆ) எவரேனும் உற்பத்தியாளரின் குறிப்பீட்டுடன், ஏற்புடைய காலாண்டிற்கான புரள்வு என்பது, ச.பா.உ.அ. சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி IA இற் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர்த்து அத்தகைய நபரினால், இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகும் எந்தவொரு பொருளிற்கும் அந்த காலாண்டில் பெறப்பட் ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை எனப் பொருள்படும்;

இ) எவையேனும் விபரணமுடைய சேவை ஒன்றை வழங்கும் வியாபாரத்தை முன் எடுக்கும் நபரின் குறிப்பீட்டுடன் ஏற்புடைய காலாண்டிற்கான புரள்வு பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றது.

i. ஏதேனும் நிதிச் சேவையினை வழங்கும் வியாபாரம்
ஏற்புடைய காலாண்டிற்கான புரள்வு என்பது, ச.பா.உ.அ. சட்டத்தின் முதலம் அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர்ந்த, இலங்கையில் ஏதேனும் நிதிச் சேவைகளை வழங்கும் வியாபாரத்தினை மேற்கொள்ளும் எவரேனும் நபரினால் ஏதேனும் நிதிச் சேவைகளில் இலங்கையில் வழங்குவதிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை எனப் பொருள்படும்;

ii. காணி மற்றும் சீராக்கல் போன்ற வியாபாரம்,
ஏற்புடைய காலாண்டிற்கான புரள்வு என்பது,. ச.பா.உ.அ. சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர்ந்த, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (7) ஆம் உப பிரிவின் கீழ் பெறப்பட்ட காணி மற்றும் சீராக்கல் வியாபாரத்திலிருந்து எழும் ஏதேனும் சேவையினது பெறுமதி எனப் பொருள்படும்;

iii. மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் தவிர்ந்த ஏதேனும் சேவையை வழங்கி ஏற்புடைய காலாண்டிற்கான புரள்வு என்பது, ச.பா.உ.அ. சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர்த்து இலங்கையில் சேவையின் வழங்குகையில் இருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை எனப் பொருள்படும்.

(ஈ) ஒரு பொருளின் தயாரிப்பாளராக இருந்து, அத் தயாரிப்பாளரினால் அப்பொருளின் விற்பனை தவிர்ந்த அத்தகைய பொருளின் இறக்குமதி மற்றும் விற்பனை அடங்கலாக ஏதேனும் பொருளின் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை வியாபாரத்தை மேற்கொள்ளும் நபரின் குறிப்பீட்டில், ஏற்புடைய புரள்வு என்பது, ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி IB இல் குறிப்பிட்டுள்ள விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர்த்து, இலங்கையில் ஏதேனும் பொருளின் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனையிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை எனப் பொருள்படும்.

*பந்திகள் (ஆ), (இ) மற்றும் (ஈ) இன் தேவைப்பாட்டிற்கு புரள்வானது பின்வருவனவற்றை உள்ளடக்கப்படமாட்டாது –*

- *அந்த காலாண்டில் அத்தகைய நபரினால் உறப்பட்ட ஏதேனும் அறவிடா கடன்..*
- *2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் சட்டத்தின் கீழ் ஏற்புடைய காலாண்டிற்கு செலுத்தப்பட்ட ஏதேனும் பெறுமதி சேர் வரி*
- *அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சர்வதேச நிகழ்வு தொடர்பில் ஏற்றுமதி அபிவிருத்தி தள்ளுபடியின் கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் தள்ளுபடி*

***பின்னர் சேகரிக்கப்பட்ட ஏதேனும் அறவிடா கடனானது, அத்தகைய அறவிடா கடன் சேகரிக்கப்பட்ட காலப்பகுதியின் புரள்விற்கு சேர்க்கப்படுதல் வேண்டும்.*** .

### *8. பற்று மற்றும் மீள்கொடுப்பனவு பொறிமுறை (பிரிவு 36)*

*சட்டத்தில் உள்ளீட்டுப் பற்று (Input credit) அல்லது மீள்கொடுப்பனவு (Refund) பொறிமுறை ஏதும் இல்லை. எவ்வாறாயினும், ஏதேனும் ஏற்புடைய காலாண்டிற்கு அத்தகைய நபரினால் ஏதேனும் மேலதிக தொகையாக அறவீடு அல்லது தண்டம் செலுத்தப்பட்டிருப்பின், அத் தொகையானது ஏற்புடைய காலாண்டிற்கு தொடர்ந்து வரும் ஏதேனும் காலாண்டிற்கு செலுத்தப்பட்ட முற்பணமாக கருதப்படுதல் வேண்டும்.*

.

### *9. இணக்கமின்மைக்கான தண்டங்கள்*

*அ) குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பதிவிற்கு விண்ணப்பிக்கத் தவறின் – ரூபா 25,000 இனை விஞ்சாத தண்டம்*

*ஆ) விபரத்திரட்டினை சமர்ப்பிக்கத் தவறின் - ரூபா 50,000 இனை விஞ்சாத தண்டம்*

*இ) தவறுகையிலுள்ள கொடுப்பனவு -*

*அ) தவறுகையிலுள்ள தொகையின் 10% ; மற்றும்*
*ஆ) தவறுகையிலுள்ள ஒவ்வொரு மேலதிக மாதத்திற்கும் 2% மேலதிகத் தொகை*

*தண்டமாக செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகையானது அறவீட்டின் 100% இனை விஞ்சுதல் ஆகாது. .*

### *10. பதிவை இரத்துசெய்தல் (பிரிவு 10)*

*கீழ்வரும் காரணங்களுக்காக, பதிவு செய்துள்ள நபர் ஒருவர், அவர் பதிவு செய்த திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்கள் கடந்த பின்னர் எந்தவொரு வேளையிலும் பதிவினை இரத்து செய்வதற்கு ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பம் ஒன்றை மேற்கொள்ளலாம் –*

- *பதிவு செய்துள்ள நபர், பிரிவு 2 இல் குறிப்பிட்டுள்ள வியாபரத்தை முடிவுறுத்தி இருப்பின்*
- *ஏற்புடைய காலாண்டின் அதற்கு அடுத்து முந்திய நான்கு காலாண்டுகளின் போது அத்தகைய பதிவு செய்துள்ள நபரின் மொத்த புரள்வானது, நூற்றியிருபது மில்லியன் ரூபாக்களை விஞ்சாவிடின்*

### *11. மேலதிக விபரங்களுக்கு*

*மேலதிக விபரங்கள் ஏதேனும் இருப்பின், அவற்றை அறிந்து கொள்ள tpl@ird.gov.lk என்ற மின்னஞ்சலூடாக மின்னஞ்சலை அனுப்பி வைக்கலாம் அல்லது கீழ்வரும் உத்தியோகத்தர்களை தரப்பட்ட இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளலாம்.*

*பிரதி ஆணைளயாளர் நாயகம் (வரிக் கொள்கை, சட்டவாக்கம் மற்றும் சர்வதேச அலுவல்கள்)*
*- 0112135300*

*சிரேஷ்ட ஆணையாளர் (செயலகம்) - 0112135410*

*ஆணையாளர் (வரிக் கொள்கை மற்றும் சட்டவாக்கம்) - 0112135412*

*சிரேஷ்ட பிரதி ஆணையாளர்கள் (வரிக் கொள்கை மற்றும் சட்டவாக்கம்) -*
*01121354**41/34/38/33/35/32***

## உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

**வரிகள் - வளமான எதிர் காலத்திற்காக**